A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 03 / 2024**

திரு R. செல்வராஜ்,
1–E–1 அன்னூர் ரோடு,
ஊழல் ஒழிப்பு மற்றும் சட்ட பாதுகாப்பு குழு,
சாமளாபுரம், மங்கலம் வழி, திருப்பூர் – 641 663.

………மேல்முறையீட்டாளர்
(திரு R. செல்வராஜ்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ சாமிநாதபுரம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தலையுத்து SS வளாகம் புஷ்பத்தூர் அஞ்சல், பழனி – 624 618.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ பழனி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம் இரயில்வே பீடர், பழனி – 624 601.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு R. கமலகண்ணன், செயற்பொறியாளர்/ இ&ப/ பழனி
திரு A. பெர்னார்ட் சுரேஷ், உதவி செயற்பொறியாளர்/மேற்கு/பழனி)

**மனு பெறப்பட்ட நாள்: 08–01–2024**

**கேட்புரை நாள்: 13–03–2024**

**ஆணை நாள்: 20–03–2024**

08.01.2024 அன்று பெறப்பட்ட திரு R. செல்வராஜ், 1–E–1 அன்னூர் ரோடு, ஊழல் ஒழிப்பு மற்றும் சட்ட பாதுகாப்பு குழு, சாமளாபுரம், மங்கலம் வழி, திருப்பூர் – 641 663 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 03/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 13.03.2024 அன்று

நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

ச.வே.எண். 376/11 மற்றும் 376/16 ஆகிய காலையின் பூமியின் மேலே செல்லும் மின்வாரியத்தின் மின்கம்பிகளை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 பழனி வட்டம், குமாரபாளையம், முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் ச.வே.எண்:376/11 மற்றும் 376/16 ஆகிய காலையின் பூமியின் மேலே செல்லும் மின்வாரியத்தின் மின்கம்பிகளை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பிகளை மாற்றி அமைக்க மேல்முறையீட்டாளர் விரும்பினால் பதிவு கட்டணம் மற்றும் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும் பட்சத்தில், மின்கம்பங்கள் மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேல்முறையீட்டாளருக்கு உதவி பொறியாளர் கடித வாயிலாக தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 வாரிய செலவிலேயே மின்கம்பிகளை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 19.10.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் 07.12.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 07.12.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மற்றும் மின்குறைதீர்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் உள்ள வழிகாட்டுதல்களின்படியும், மின்சார சட்டத்தின்படி வகுக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிமுறைகளின்படியும் தான் மின்குறைதீர் மன்றம் நுகர்வோரின் குறைகளுக்கு தீர்வு காண இயலும். எனவே, தற்பொழுதுள்ள தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(6)–ன்படி ஏற்கனவே அமைக்கப்பட்ட மின்பாதை மற்றும் மின்கம்பங்களை மாற்றியமைக்க உரிய விண்ணப்பம் பங்கு வைப்பு திட்டத்தில் பதிவு செய்து (DCW) மற்றும் அதற்குரிய தொகை செலுத்தினால் மட்டுமே மனுதாரரின் கோரிக்கை எதிர்மனுதாரரால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 40 வருடங்களுக்கு முன் பட்டா நிலத்தில் அமைக்கப்பட்ட மின் கம்பங்களுக்கு நஷ்டஈடு தர வழிவகை ஏதும் இல்லை என தீர்வு செய்து மனு எண்.41/2023 இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 13.03.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு R. செல்வராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. கமலகண்ணன், செயற்பொறியாளர்/ இ&ப/ பழனி மற்றும் திரு A. பெர்னார்ட் சுரேஷ், உதவி செயற்பொறியாளர்/மேற்கு/பழனி, திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர்

மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் சாமிநாதபுரம் மின்பகிர்மான பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட குமாரபாளையம் கிராமத்தில் ச.வே.எண்:376/11, 376/16 ஆகிய காலையில் தங்களது பூமி உள்ளதாகவும், இந்த பூமியின் மேலே தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கம்பிகள் செல்கிறதாகவும், இந்த மின் கம்பங்களை அகற்ற கோரி மின்வாரியத்திடம் விண்ணப்பம் செய்ததாகவும், ஆனால் மின்வாரியம் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் மின்கம்பங்களை மாற்றி அமைக்க இயலும் என்று கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 ஆனால் தனியாரது நிலத்தில் எவ்விதமான ஒப்புதல் கடிதமும் பெறாமல் மின்கம்பி அமைத்து இருந்தால் மின்கம்பம் இடமாற்றம் மின் உரிமைதாரர் தனது சொந்த செலவில் மின் கம்பம், மின் கம்பிகளை இடமாற்றம் செய்து தர வேண்டும் எனவும், W.A.(MD) No.932/2010 W.P. (MD) No.2/2010 & சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிமன்றம் தெளிவான தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இது தொடர்பாக TamilNadu Electricity Ombudsman A.P.No.37/2019 பத்தி 7.11–ல் நில உரிமையாளரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபனையும் பெறப்படாத நேர்வில் அதை அனுமதிக்கப்பட்ட ஒன்றாக கருதக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் நஷ்டஈடாக அளிக்கப்படாத நேர்வில் மின்பாதை மற்றும் மின்கம்பம் அதை அனுமதிக்கப்பட்ட ஒன்றாக கருதக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் நஷ்ட ஈடு அளிக்கப்படாத நேர்வில் மின்பாதை உரிமைதாரர் அவரது சொந்த செலவில் மாற்ற வேண்டும் என்ற மகத்தான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் இந்திய தொலைதொடர்பு சட்டம் 1885 பிரிவு (10)ன் படியும் மின்சார சட்டம் 2003 பிரிவு 164–ன் படியும் மின் கம்பமோ அல்லது மின் பாதையோ எந்த ஒரு நிலத்திலும் அமைக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதே சமயம் ஒரு நபருக்கு சொந்தமான நிலத்தில் மின் கம்பமோ (அ) மின் பாதையோ அமைக்கப்பட வேண்டிய நேர்வில் இந்திய தொலை தொடர்பு சட்டம் பிரிவு 10(4)ன் படி முழு நஷ்ட ஈடு தரப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இது தொடர்பாக மின்சார வாரியம் நஷ்டஈடு வழங்கியுள்ளது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல் கோரியபோது ஒப்புதல் கடிதம் அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை என தகவல் வழங்கியதாகவும், எனவே மின்பாதை அமைக்க நிலத்தின் உரிமையாளர் ஒப்புதல் கடிதமோ நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதற்கான ஆவணங்கள் ஏதும் மின்சார வாரியத்தில் இருந்து தனக்கு வழங்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் தனியார் நிலத்தில் மின் கம்பமோ (அ) மின் பாதையோ அமைப்பதற்கு வேண்டிய சூழ்நிலையில் நில உரிமையாளரிடம் இருந்து ஆட்சேபனை பெறப்படாமலும், நஷ்ட ஈடு வழங்கப்படாத நேர்வில் மின் உரிமைதாரர் சொந்த செலவில் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று மின்துறை தீர்ப்பாணையம் சென்னை மேல்முறையீட்டு மனு எண்:65/2019 மற்றும் மேல்முறையீட்டு மனுவின் 03/2022–ல் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பான திங்கள் 15.11.2023 நேரில் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் திண்டுக்கல் அவர்கள் முன்பு விசாரணை செய்யப்பட்டதாகவும், விசாரணையில் கலந்துகொண்டு மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்பு மின்குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களின் தீர்ப்பு திரு.தலைவர் நுகர்வோர் குறைதீர் மன்றம் திண்டுக்கல் அவர்களுக்கு அளித்துள்ளதாகவும், பின்பு செயற்பொறியாளர் பகிர்மானம் பழனி அவர்கள் கடிதம் எண்: சேபொ/ப/பழனி/தொநூ/கோ.CGRF/அ.எண்:2160 (23ம் நாள் 14.11.2023) கடிதத்தின் வழியாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தனது கோரிக்கையை நிராகரித்து கடிதம் அனுப்பி உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேல்முறையீட்டாளர் தன்னுடைய குறைதீர்க்கும் கோரிக்கை மனுவின் மீது விசாரணை அலுவலரான குறைதீர்க்கும் மன்றத்திற்கே இறுதி உத்திரவை பிறப்பிக்க

அதிகாரம் உள்ளது. ஆனால் இதுநாள் வரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் பழனி, திண்டுக்கல் மாவட்டம் அவர்களிடம் இருந்து எந்தவிதமான ஆணைகளும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே மின் குறை தீர்ப்பாளர் தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை ஆகிய தாங்கள் உரிய விசாரணை செய்து தனக்கு நீதி வழங்கும்படி கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 பழனி வட்டம், குமாரபாளையம், முத்துநாயக்கன்பட்டி கிராமம் பட்டா எண்.1379 சர்வே எண். 376/11 மற்றும் 376/16–ல் புகார் மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் செல்லும் மின்கம்பங்களை அகற்ற கோரியுள்ளதாகவும், இந்த மின்கம்பங்கள் 292–004–38 என்ற விவசாய மின் இணைப்பிற்க்காக கடந்த 1960–ம் ஆண்டு அமைக்கப்பட்டதாகவும், மின்சாரவாரிய விதிகளின் படி மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு விண்ணப்பம் அளித்து பதிவுக்கட்டணம் மற்றும் மதிப்பீட்டுத்தொகை செலுத்திய பின்பு தான் மின்கம்பங்களை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் ஏற்கனவே மனுதாரருக்கு உதவி மின் பொறியாளர் சாமிநாதபுரம் அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.A.(MD)No.932/2010 W.P.(MD)No.2/2010 வழங்கிய தீர்ப்புரையில் தனியாரது நிலத்தில் எவ்விதமான ஒப்புதல் கடிதம் பெறாமல் மின் கம்பி அமைத்து இருந்தால் அம்மின்கம்பத்தை இடமாற்றம் செய்ய மின் உரிமைதாரர் தனது சொந்த செலவில் மின்கம்பத்தை இடமாற்றம் செய்து தர வேண்டும் என தீர்ப்பு வழங்கி உள்ளதாக மேற்கோல் காட்டி மேல்முறையீட்டு மனுதாரர் தற்போது தனக்கு (2021 லிருந்து) சொந்தமான முத்துநாயக்கன்பட்டி சர்வே எண் 376/11 மற்றும் 376/16ல் நிலத்தின் வழியாக 292–004–38 என்ற விவசாய மின் இணைப்பிற்க்காக 1960–ம் ஆண்டில் அமைக்கப்பட்ட மின்கம்பத்தை மின் உரிமைதாரர் சொந்த செலவில் மாற்ற கோரியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்திய தொலைதொடர்பு சட்டம் 1885 பிரிவு (10) ன் படியும் அப்போதய மின்வாரிய சட்டத்தின் படியும் அப்போதய உரிமையாளரிடமிருந்து அனுமதி பெற்று

மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்கப்பட்டு அப்பகுதி விவசாயிகளின் விவசாய நிலத்தின் நீர்பாசனத்திற்காக தற்போது வரை பயன்படுத்தப்பட்டு வருகிறதாகவும், சுமார் 60 ஆண்டுகளுக்கு பின்பு தற்போது வரை அந்த நிலத்தின் அப்போதைய (1960 முதல் 2020 வரை) நில உரிமையாளரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபனை கடிதமோ இவலுவலகத்திற்கு வரபெறவில்லை என்பதிலிருந்து அப்போதைய உரிமையாளரிடமிருந்து உரிய அனுமதி பெற்று அவரது முழு ஒப்புதலுடன் அம் மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேல்முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வாயிலாக மின்சார வாரியம் நஷ்ட ஈடு வழங்கியுள்ளது தொடர்பாக தகவல் கோரியதாகவும் ஒப்புதல் கடிதம் அலுவலகத்தில் கிடைக்க பெறவில்லை என தகவல் கிடைத்ததாகவும் அதன் அடிப்படையில் மின்வாரியம் அப்போதைய நில உரிமையாளர் ஒப்புதல் கடிதம் அளிக்கவில்லை எனவும் மின் உரிமைதாரர் நஷ்ட ஈடு வழங்க வில்லை எனவும் கருதி வருவாய் ஆவணங்களின் படி அப்போது நிலத்தின் மீது உரிமையில்லாத தற்போதைய (ஆவணங்களின் படி 2020 முதல்) உரிமையாளரான மேல்முறையீட்டு மனுதாரர் மின் துறை தீர்ப்பானையம் சொன்ன மேல்முறையீட்டு மனு எண் 65/2019, மனு எண் 37/2019 மற்றும் மேல்முறையீட்டு மனு எண் 03/2022 தீர்ப்பை மேற்கோல்காட்டி மின் உரிமைதாரர் சொந்த செலவில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் அப்போதைய உரிமையாளரின் ஒப்புதலுடன் அமைக்கப்பட்ட மின் கம்பத்தை மாற்றி அமைக்க கோரியுள்ளது ஏற்புடையதாக இல்லை எனவும், மேலும் மேல்முறையீட்டு மனுதாரர் வருவாய் ஆவணங்களின் படி மேற்குறிப்பிட்ட நிலத்தில் உள்ள மின்கம்பம் மாற்றி அமைத்து நிவாரணம் கோரி மனு செய்ய உரிமையற்றவறாக கருதப்படுகிறது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திரு. R.செல்வராஜ் அவர்கள் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்பாதை 1960 –ம் ஆண்டு வாரிய விதிமுறைகளின் படி அமைக்கப்பட்ட மின்பாதை எனவும், தமிழ்நாடு மின் வழங்கல் விதி தொகுப்பு அத்தியாயம்–2 பகுதி 5 (6)–ன் படி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்கள், மின் பாதைகள் மற்றும் மின் சாதனங்கள்

ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு நுகர்வோர் மதிப்பீட்டு கட்டணம் கட்டாயம் செலுத்த வேண்டும் என்ற விதி TNERC/SC/7-4, Dated 25-05-2007 வழியாக 13-06-2007 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 திரு. R.செல்வராஜ் அவர்கள் மாற்றியமைக்க கோரும் மின்பாதையானது 1960-ம் ஆண்டில் அதாவது சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே 13-06-2007 முதல் அமுல்படுத்தப்பட்ட TNERC/SC/7-4, Dated 25-05-2007 விதியின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்கள், மின் பாதைகள் மற்றும் மின் சாதனங்கள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு நுகர்வோர் மதிப்பீட்டு கட்டணம் கட்டாயம் செலுத்த வேண்டும் எனவும், மேலும், திரு R.செல்வராஜ் அவர்கள் வழங்கிய ஆவணங்களின்படி 2021-ம் ஆண்டிலிருந்துதான் மேற்படி நிலத்தின் உரிமையாளர் ஆவார். எனவே மேற்கூரிய விதிகளின்படி மேல்முறையீட்டு மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள உகந்ததல்ல எனவும், மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் சாமிநாதபுரம் மின்பகிர்மான பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட குமாரபாளையம் கிராமத்தில் ச.வே.எண்:376/11, 376/16 ஆகிய காலையில் அவர்களது பூமி உள்ளதாகவும், இந்த பூமியின் மேலே தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கம்பிகள் செல்கிறதாகவும், இந்த மின் கம்பங்களை அகற்ற கோரி மின்வாரியத்திடம் விண்ணப்பம் செய்ததாகவும், ஆனால் மின்வாரியம் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் மின்கம்பங்களை மாற்றி அமைக்க இயலும் என்று கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 மேலும் இந்திய தொலைதொடர்பு சட்டம் 1885 பிரிவு (10)ன் படியும் மின்சார சட்டம் 2003 பிரிவு 164-ன் படியும் மின் கம்பமோ அல்லது மின் பாதையோ எந்த ஒரு நிலத்திலும் அமைக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதே சமயம் ஒரு நபருக்கு

சொந்தமான நிலத்தில் மின் கம்பமோ (அ) மின் பாதையோ அமைக்கப்பட வேண்டிய நேர்வில் இந்திய தொலை தொடர்பு சட்டம் பிரிவு 10(4)ன் படி முழு நஷ்ட ஈடு தரப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 இது தொடர்பாக மின்சார வாரியம் நஷ்டஈடு வழங்கியுள்ளது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல் கோரியபோது ஒப்புதல் கடிதம் அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை என தகவல் வழங்கியதாகவும், எனவே மின்பாதை அமைக்க நிலத்தின் உரிமையாளர் ஒப்புதல் கடிதமோ நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதற்கான ஆவணங்கள் ஏதும் மின்சார வாரியத்தில் இருந்து தனக்கு வழங்கப்படவில்லை எனவும், எனவே தனது நிலத்தின் மீது செல்லும் மின்பாதை மற்றும் மின்கம்பத்தை மின் உரிமதாரர் செலவில் மாற்றித் தரக் கோரி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் செல்லும் மின்கம்பங்கள் 292–004–38 என்ற விவசாய மின் இணைப்பிற்க்காக கடந்த 1960–ம் ஆண்டு அமைக்கப்பட்டதாகவும், மின்வாரிய விதிகளின் படி மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு விண்ணப்பம் அளித்து பதிவுக்கட்டணம் மற்றும் மதிப்பீட்டுத்தொகை செலுத்திய பின்பு தான் மின்கம்பங்களை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இந்திய தொலைதொடர்பு சட்டம் 1885 பிரிவு (10) ன் படியும் அப்போதைய மின்வாரிய சட்டத்தின் படியும் அப்போதய உரிமையாளரிடமிருந்து அனுமதி பெற்று மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்கப்பட்டு அப்பகுதி விவசாயிகளின் விவசாய நிலத்தின் நீர்பாசனத்திற்காக தற்போது வரை பயன்படுத்தப்பட்டு வருகிறதாகவும், சுமார் 60 ஆண்டுகளுக்கு பின்பு தற்போது வரை அந்த நிலத்தின் அப்போதைய (1960 முதல் 2020 வரை) நில உரிமையாளரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபனை கடிதமும் இவ்வலுவலகத்திற்கு வரபெறவில்லை என்பதிலிருந்து அப்போதைய உரிமையாளரிடமிருந்து உரிய அனுமதி பெற்று அவரது முழு ஒப்புதலுடன் அம் மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் மாற்றியமைக்க கோரும் மின்பாதையானது 1960 ஆம் ஆண்டில் அதாவது சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே 13-06-2007 முதல் அமுல்படுத்தப்பட்ட TNERC/SC/7-4, Dated 25-05-2007 விதியின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்கள், மின் பாதைகள் மற்றும் மின் சாதனங்கள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு நுகர்வோர் மதிப்பீட்டு கட்டணம் கட்டாயம் செலுத்த வேண்டும் எனவும், மேலும், மேல்முறையீட்டாளர் அவர்கள் வழங்கிய ஆவணங்களின்படி 2021-ம் ஆண்டிலிருந்துதான் மேற்படி நிலத்தின் உரிமையாளர் ஆவார். எனவே மேற்கூரிய விதிகளின்படி மேல்முறையீட்டு மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள உகந்ததல்ல எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் 2001 ஆம் ஆண்டிலிருந்து மேற்கூறிய நிலத்தின் உரிமையாளர் என தெரிவித்துள்ளார்.

7.8 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விதிகள் அமல்படுத்துவதற்கு முன்பு நடைமுறையில் இருந்த விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.9 இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51-இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885-இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (தற்பொழுது தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***

*Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of*

*telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.10 மேலும், மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*
1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*
2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*
3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*
4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.11 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.12 இவ்வழக்கை பொறுத்தவரை மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான இடத்தில் செல்லும் மின்பாதை மற்றும் மின்கம்பங்கள் 1960–ம் ஆண்டு வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்பு எண்.292–004–38–ற்காக அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. மேல்முறையீட்டாளர் 2001 ஆம் ஆண்டிலிருந்துதான் மேற்படி நிலத்தின் உரிமையாளர் ஆவார். சுமார் 60 ஆண்டுகளுக்கு முந்தைய அப்போதைய

நிலத்தின் நில உரிமையாளரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபனை கடிதமும் பெறப்படவில்லையென்றும், அப்போதைய உரிமையாளரிடமிருந்து உரிய அனுமதி பெற்று அவரது முழு ஒப்புதலுடன்தான் மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ள எதிர்மனுதாரரின் கருத்தையும் இங்கு புறந்தள்ள இயலாது என நான் கருதுகிறேன்.

7.13 மேலும் மின்பாதையானது 1960 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட நிலையில் 2001 ஆண்டில் தான் மேல்முறையீட்டாளர் பயன்பாட்டில் இருந்து வருகின்ற மின்பாதை உள்ள நிலத்தை விலைக்கு வாங்கியதாக தெரிய வருகின்றது. மின்பாதை அமைக்கப்பட்டபோது நிலத்தின் உரிமையாளராக மேல்முறையீட்டாளர் இல்லாத நேர்வில் இந்திய தொலை தொடர்பு சட்டம் பிரிவு 10(4)ன் படி நஷ்ட ஈடு கோருவது ஏற்புடையதாக இல்லை என தீர்வு செய்யப்படுகிறது. மேலும், குமாரபாளையம் கிராமம் ச.வே.எண்:376/11 மற்றும் 16 ஆகிய நிலத்திற்கு 2001 ஆம் ஆண்டிற்கு பின்புதான் மேல்முறையீட்டாளர் உரிமையாளர் என்பதால் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விதிகளின்படி மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.14 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்கம்பத்தை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் எனவும் அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிய வருகிறது.

7.15 மேலும் மின் இணைப்பு விவசாய பயனாளிக்கு வழங்கும் பொழுது அம்மின்பாதை அடுத்தடுத்து உள்ள நிலங்கள் வழியாகதான் வழங்க இயலும் என்பதால் 1960–இல் 292–

004–38 என்ற மின் இணைப்பை வழங்கிய மின்கம்பத்தை மாற்றித்தர கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை TNERC Supply Code Regulation 6–ன்படி பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்தின்பேரில் மதிப்பீடு தயார் செய்து மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தும்பட்டித்தில் மின்கம்பம் மாற்றிதர இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்று கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மின் இணைப்பு 1960–இல் விவசாய மின் இணைப்பு வழங்க அமைக்கப்பட்ட மின் கம்பம் மற்றும் மின்பாதையை மேல்முறையீட்டாளர் மாற்ற விரும்பினால் தற்பொழுது நடைமுறையில இருந்து வரும் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை தொழில்நுட்ப சாத்திய கூறுகள் அடிப்படையில் மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 03/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு R. செல்வராஜ், – By RPAD
1–E–1 அன்னூர் ரோடு,
ஊழல் ஒழிப்பு மற்றும் சட்ட பாதுகாப்பு குழு,
சாமளாபுரம், மங்கலம் வழி, திருப்பூர் – 641 663.

2. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ சாமிநாதபுரம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தலையுத்து SS வளாகம் புஷ்பத்தூர் அஞ்சல், பழனி – 624 618.

3. செயற்பொறியாளர்/ இ&ப/ பழனி,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம் இரயில்வே பீடர், பழனி – 624 601.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
**திண்டுக்கல்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – **624 002.**

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.